முருகப்பெருமான் துணை

**மகான் இளையான்குடி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.09.2023**, திங்கட்கிழமை

1. மக்களை ஞான வழிநடத்தி
மாதவசியாக வந்த அரங்கா
ஆக்கமுடன் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது தரிவை திங்கள்
2. திங்களிலே அட்டமதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08 ம் நாள், 25.09.2023, திங்கட்கிழமை)
தேசிகன் கேட்க அறிவுரை ஆசி
இங்கனமே இளையான்குடி நாயனாரும்
இயம்பிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்பெற அரங்கன் தரும ஞான
நல்வழியே நம்பிக்கை தரும்படி
பலம்பெற ஆற்றலாக இருக்க
பாடிடுவேன் கலியுக மக்கள்
4. மக்களெல்லாம் பிரணவக் குடிலில்
மாதவபலம் வேண்டி வர
ஆக்கம் தரும் சடாட்சர தீட்சை
அனைவரும் ஏற்று வர
5. வருகவே சக்திநிலை பெருகி
வடிவேலனை காணும் வாய்ப்பு
ஆறுமுகஅரங்கன் வழி காட்டும்
அன்னதான சேவைவழி கிட்டும்
6. கிட்டவே கொடி வர்ணமென
குறையிலா அடையாளமாக
வாட்டமற காட்சிகள் கிட்டி
வரங்களாக அரங்கன் வழி

7. வழிவழி ஞானிகள் படைகளாக
வரங்களாக உலகில் மக்கள்
அழிவிலா தேறி சிறப்பர்
அறம்தனை மிகுதி செய்து
8. செய்துமே உலகமாற்றம் தனை
செய்யும் வண்ணம் சக்திகூடி
அய்யமற அரங்கன் வழி
ஆறுமுகனார் ஆசி பெற்ற மக்களாக
9. மக்களாகத் தேறி உலகில்
மகான்களாய் ஞானிகளாய்
தேக்கமின்றி தேறிடுவர்
தெய்வபலம் கொண்ட தேசம் படைப்பர்
10. படைப்பர் ஞானத்தலைமை
படைப்பர் ஞான ஆட்சி
துடைப்பர் உலக இன்னலை
துணிந்து சேவை ஆற்றி
11. ஆற்றியே அஞ்ஞானவான்களை
அகற்றி ஞானபண்டிதனின்
ஆற்றல்கொண்டவர்களை நிறுத்தி
அற்புதம் கலியினில் படைப்பர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–